1971 டிசம்பர் 16]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கார்ப்பரேஷனோ அல்லது நகராட்சி, பேரூராட்சிகளோ, எல்.ஐ.சி. யிடம் இருந்து நேரிடையாகக் கடன் பெறுவதற்குத் தடையில்லை. ஆனால் கடன் பெறுகிற நேரத்தில் சர்க்கார் காரண்டி தேவை. அப்படிச் சர்க்கார் காரண்டி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது.

Water-supply schemes

* 446. *Q.*—Thiru E. S. THYAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the national water-supply scheme is still in force in Tamil Nadu; and

(*b*) if so, whether any scheme is pending in Tiruttani taluk of Chingleput district?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) தேசிய நீர் வழங்கும் திட்டம் இப்போது செயல்படவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து பொதுச் சுகாதாரப் பொறியல்—நகராட்சிப் பணிகள் துறையால் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு, கழிவு நீரகற்றுத் திட்டப் பணிகள் 1968-69-ம் ஆண்டு வரை தேசீய குடிநீர் வழங்கு—துப்புரவுத் திட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப்பட்டு வந்தன. தேசிய குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட திட்டப் பணிகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(இ) திருத்தணி வட்டத்தில் தேசிய குடிநீர் வழங்கு துப்புரவுத் திட்டத்தின் கீழ் ஏற்பளிக்கப்பட்டுள்ள ஒரே திட்டம் திருத்தணி ஊராட்சி குடிநீர் வழங்கு திட்டமாகும். சிறு வேலையினங்களைத் தவிர இத் திட்டப்பணி அநேகமாக முடிந்துவிட்டது. இருந்தபோதிலும், முறையான குடிநீர் வழங்கு திட்டம் திருத்தணி ஊராட்சியில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : திருத்தணி வட்டத்தில் பல கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கு திட்டம் அமுலாக்கப்படவில்லையே. அதற்கேதேனும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது முடிந்த பிறகு அவற்றைப்பற்றி எல்லாம் யோசிக்கலாம்.

திரு. என். மருதாசலம் : கோவையில் சிறுவாணி குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெகு விரைவில் கோள முதல் அமைச்சரை நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சென்று சந்திக்கிற அளவில் உள்ளது.

* 447. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. Chief Minister be pleased to state the details of the protected water-supply scheme for Kanyakumari district at present?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தற்போது செயல்பட்டு வருகின்ற கன்னியாகுமரி மாவட்ட நீர் வழங்குதிட்ட விவரம் வருமாறு :—

1. நாகர்கோயில் நீர்வழங்கு மேம்பாட்டுத் திட்டம்.
2. குழித்துறை நீர் வழங்கு திட்டம்.
3. முட்டம் நீர்வழங்கு மேம்பாட்டுத்திட்டம்;
4. கரிங்கால் நீர் வழங்கு மேம்பாட்டுத்திட்டம்.

திரு. என். டென்னிஸ் : பட்டணங்கால் திட்டம் அமலாக்கப் படுவதில் குழித்துறை திட்டத்தை குடிநீர் திட்டமாக மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி உடனடியாகச் சொல்வதற்கில்லை. இந்தக் கேள்வியை வைத்து ஆராய வேண்டும்.

மத்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்கள்

* 448 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசுக்குச் சேர வேண்டிய நடப்பு ஆண்டு கடனை திருப்பிச் செலுத்துவதற்கு கால அளவினை மாற்ற 1969, 1970ம் ஆண்டுகளில் மாநில அரசு கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கு இந்திய அரசு தந்துள்ள பதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்திய அரசு இரண்டு ஆண்டுகளிலும் கடன் தவணைக்கான கால அளவை நீட்டிக்க அதாவது அக்டோபர் திங்கள் முதல்நாள் செலுத்த வேண்டிய கடன் தவணையை, அந்நிதியாண்டின் முடிவுக்குள் செலுத்தலாமென்று ஒப்புக்கொண்டது. அந்த ஆண்டினைக் கடந்து கால அளவினை நீட்டிக்க ஒப்புக் கொள்ளவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு வருமானம் குறைவாக இருப்பதன் காரணமாக, ஆக்கபூர்வமாக, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய காலமாகையால் கொடுத்த கடனின் காலத் தவணையை இந்திய அரசு நீட்டித்தர வேண்டுமென்று வற்புறுத்த ஏதாவது முயற்சிக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிதி விஷயத்தில் நாம் அடிக்கடி மத்திய அரசினிடத்தில் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். மேலும் பேசுவோம். தொடர்ந்து பேசுவோம்.